1978 செப்டம்பர் 13]

(உ) வெங்காயத்தின் விலை வீழ்ச்சி.

திரு. செ. சதாசிவம்: பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாட்டில் சமீபத்தில் வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே வெங்காய ஏற்றுமதிக் கொள்கையை மத்திய அரசு, தீர்மானிக்கிறது. வெங்காய உற்பத்தியையும் விலை நிலவரங்களையும் பொறுத்து மாநில அரசுடன் கலந்துகொண்டு வெங்காய ஏற்றுமதியை அனுமதிப்பதையோ தடை செய்வதையோ மத்திய அரசு தீர்மானம் செய்து ஆணைகள் பிறப்பிக்கின்றது.

2. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 2.47 லட்சம் டன் வெங்காயம் தமிழ்நாட்டு மக்களின் உபயோகத்திற்குத் தேவைப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டின் உற்பத்தியோ சுமார் 1.90 லட்சம் டன்கள்தான். மார்ச்சு மாதத்தில் ஒரு முறை செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் ஒருமுறையாக வருடத்தில் இரண்டு முறை வெங்காயம் அறுவடை செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் முக்கியமாக மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வெங்காயம் பயிரிடப்படுகிறது. மதுரையில் சுமார் ஒரு லட்சம் டன்னும், கோவையில் 40 ஆயிரம் டன்னும், திருச்சிராப்பள்ளியில் 22 ஆயிரம் டன்னும், திருநெல்வேலியில் 30 ஆயிரம் டன்னும் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகவே வெங்காயப் பற்றாக்குறையை கர்நாடக மாநிலத்திலிருந்தும் ஆந்திர மாநிலத்திலிருந்தும், தேவையான போது வணிகர்களால் கொள்முதல் செய்யப்பட்டு தமிழ்நாட்டின் தேவை நிறைவு செய்யப்படுகிறது.

3. வெங்காயம் ஏற்றுமதியை 19.7.1977 முதல் மத்திய அரசு தடை செய்தது. கர்நாடக மாநிலத்திலிருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் வெங்காய உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும், ஏற்றுமதித் தடையை நீக்குமாறு மத்திய அரசினைக் கேட்டுக்கொண்டார்கள். மாநில அரசினைக் கலந்துகொண்டு இத்தடையைத் தொடர்ந்து நீட்டிக்க மத்திய அரசு முடிவு செய்தது.

4. தமிழ்நாட்டில் சாதாரணமாக வெங்காயம் கிலோ 80 பைசா முதல் ரூ 1.20 வரை விற்கப்படும். வெங்காயத்தின் விலை மிகவும் குறைந்து விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் அதே சமயத்தில் பயன்படுத்துவோருக்கு நியாயமான விலையில் கிடைக்கும் வண்ணமும் நேப்பட் நிறுவனத்தை (NAFED—NATIONAL AGRICULTURAL CO-OPERATIVE MARKETING FEDERATION) தரத்தைப் பொறுத்து வெங்காயத்தைப் பெரிய அளவில் கொள்முதல் செய்யுமாறு மத்திய அரசு கேட்டுக்

கொண்டுள்ளது. அந்நிறுவனமும் பெரிய அளவில் வெங்காயக் கொள்முதல் செய்து, கிளை நிறுவனங்கள் மூலமும் கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் மூலமும் விநியோகம் செய்கிறது. தமிழ் நாட்டில் நேப்பட் (NAFED) நிறுவனத்தின் சென்னைக் கிளை தினசரி திண்டுக்கல் போன்ற உற்பத்தித் தளங்களிலிருந்து பெரிய அளவில் கொள்முதல் செய்கிறது. அந்நிறுவனம் செய்துள்ள கொள்முதலிலிருந்து விலைக்கு வாங்கி நுகர்வோருக்கு மலிவு விலையில் விநியோகம் செய்யுமாறு மாநில கூட்டுறவுத்துறை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இன்றைய நிலவரப்படி வெங்காய விலை கிலோ 80 பைசா முதல் ரூ. 1.20 பைசா வரை உள்ளது. அறுவடை சமயத்தில் உள்ள இந்த விலை நிலவரம் மிகவும் குறைவு என்று கூறமுடியாது. மேலும் நேப்பட் நிறுவனமும் வெங்காயம் கொள்முதல் செய்கிறது. ஆகவே உற்பத்தியாளர்களுக்கு விலைவாசியைப் பொறுத்த அளவில் பெரிய பாதிப்பு இருக்கமுடியாது என்று கருத இடமுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்தும் கர்நாடகத்திலிருந்தும் வெளிநாடுகளுக்கு வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய, மத்திய அரசு அனுமதித்துள்ளதென்றும், 19.9.1978ஆம் தேதி சுமார் 1,000 டன்கள் அளவுக்கு முதல் கப்பலில் ஏற்றுமதியை எதிர்பார்க்கலாமென்றும், சென்னை பிராந்திய மேலாளரிடமிருந்து அறியப்படுகிறது. இந்த ஏற்பாட்டினால் விவசாயிகளுக்கு ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே உள்ள விவசாயிகளுடைய வெங்காய உற்பத்தி மிக அதிகமாக இருக்கிற காரணத்தால், விலை வீழ்ச்சி அடைந்திருக்கிறது என்று கூறியிருக்கிறேன். ஆனால் அவர்கள் கூறி இருக்கிற அளவிலே தமிழகத்திற்கு மொத்தம் 2.47 லட்சம் டன் தேவை என்றும் ஆனால் நாட்டில் 1.90 லட்சம் டன்தான் உற்பத்தியாகி இருக்கிறது என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தாழ்மையுடன் கூறிக் கொள்கிறேன்.

அதோடு அவர்கள் தனது அறிக்கையிலே ஒரு கிலோ 80 பைசாவிலிருந்து 1.20 ரூபாய் வரை விற்கிறது என்று கூறுகின்றார்கள். ஆனால் விவசாயிகள் மத்தியிலே என்ன சொல்லப்படுகிறது என்றால் 75 கிலோ கொண்ட மூட்டை ஒன்று ரூ. 12 முதல் ரூ. 15 வரைதான் பரிதாபமாக விற்கப் படுகிறது என்ற காரணத்தினால் அவர்கள் இந்த வெங்காயத்தைப் பிரித்து எடுக்காமல் காட்டிலேயே விட்டுவிட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதைப்போக்குவதற்கு இந்த அரசு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சந்தேகம்தான் கேட்கச் சொன்னேன். மறுபடியும் இங்கே அத்தனையும் பேச ஆரம்பித்தால் அதற்கு நேரம் இல்லை. எனவே மேற்கொண்டு சந்தேகம் மட்டும் கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம்: அந்த வெங்காய உற்பத்தியாளர்கள் மத்திய அரசை அணுக கேட்டிருந்த நேரத்தில் அவர்கள் மாநில அரசைக் கேட்டோம், அவர்கள் தேவையில்லை என்ற முறையிலே கூறியிருப்பதாகக் கூறினார்கள். ஆகவே தயவு செய்து அமைச்சர் அவர்கள் அந்த ஏழை விவசாயிகளுடைய அக்கறையிலே நாட்டங் கொண்டு ஏற்றுமதியை விரிவுபடுத்துவதற்கான வழிவகைகளை பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வெங்காயத்தினுடைய விலை கணிசமாக விவசாயிகளைப் பாதிக்கின்ற வகையில் குறைந்திருப்பதற்குக் காரணம் ஏற்கனவே இங்கே குறிப்பிலே எடுத்துச் சொல்லியதைப் போல, தமிழகத்திலே தேவையான வெங்காயம் உற்பத்தி இல்லாமல் வெளி மாநிலங்களில் இருந்து தேவையான அளவு வெங்காயம் வருவதற்குண்டான சூழ்நிலை இருக்கிறது. மேலும் விலை இறக்கத்திற்கு, இலங்கை போன்ற அந்நிய நாடுகளுக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்வது தடைசெய்யப்பட்டிருப்பதும் காரணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல 1.20 காசுக்கு வெங்காயம் விற்கப்படுகிறது என்று குறிப்பிலே சொல்லப்பட வில்லை. சாதாரணமாக, வெங்காயம் அறுவடை நேரத்தில் 80 பைசா முதல் 1.20 வரை விற்கப்படும். ஆனால் இந்த முறை விலை குறைந்திருப்பதற்குக் காரணம் மாநில அரசாங்கங்களுடைய ஆலோசனையைக் கேட்டு மத்திய அரசாங்கம் இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கு வெங்காய ஏற்றுமதியைத் தடைசெய்திருப்பது தான் காரணம். அண்மையிலே மத்திய அரசு, மாநிலங்களின் ஆலோசனையின் பேரில், இலங்கை போன்ற நாடுகளுக்கு மீண்டும் வெங்காயம் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி தந்திருக்கிறது. ஆகவே இந்த மாதம் 19-ம் தேதி வரை 1,000 டன் வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இருக்கிற காரணத்தாலே, ஒருவேளை நியாயமான விலை விவசாயிகளுக்கு இனிமேல் கிடைக்கலாம் என்று அரசின் சார்பிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(ஊ) தஞ்சை மாவட்டத்தில் குறுவைப் பயிரை பூச்சி தாக்குவது.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு குறுவைப் பயிரில் கடுமையாக பூச்சி தாக்கி சேதம் விளைவிப்பதை உடனடியாக தடுக்க வேண்டியது பற்றி'' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை வேளாண்மைத் துறை மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.